# செலக்சன்

6

## தமிழ்

அன்பு நிலையம்

மதுரை – 625001

www.Padasalai.Net

www.Padasalai.Net www.CBSEtips.in

# செலக்சன்

## ஆறாம் வகுப்பு

## 6

# தமிழ்

**முப்பருவங்களும் இணைந்தது**

முதல் பருவம்+இரண்டாம் பருவம்+மூன்றாம் பருவம்

94430 43338
94430 46662

வெளியிடுபவர்
**அன்பு நிலையம்**
129, வடக்கு ஆவணி மூல வீதி, மதுரை – 625001

**விலை ₹ 140**

www.Padasalai.Net

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



# பொருளடக்கம்

## தமிழ்

## முதல் பருவம்



| வ.எண் | இயல் | பாடத்தலைப்புகள் | பக்க எண் |
|---|---|---|---|
| | | மனப்பாடப்பகுதி * | 5 |
| 1. | மொழி | 1.அ. இன்பத்தமிழ் * –செய்யுள் | 7 |
| | தமிழ்த்தேன் | 1.ஆ. தமிழ்க்கும்மி –செய்யுள் | 12 |
| | | 1.இ. வளர்தமிழ் –உரைநடை | 16 |
| | | 1.ஈ. கனவு பலித்தது கடிதம் –துணைப்பாடம் | 21 |
| | | 1.உ. தமிழ் எழுத்துகளின் வகையும் தொகையும் –இலக்கணம் | 23 |
| | | 1.ஊ. மொழியை ஆள்வோம் –மொழிப்பயிற்சி | 25 |
| | | 1.எ. மொழியோடு விளையாடு –மொழிப்பயிற்சி | 28 |
| 2. | இயற்கை | 2.அ. சிலப்பதிகாரம் * –செய்யுள் | 30 |
| | இயற்கை இன்பம் | 2.ஆ. காணிநிலம் * –செய்யுள் | 34 |
| | | 2.இ. சிறகின் ஓசை –உரைநடை | 38 |
| | | 2.ஈ. கிழவனும் கடலும் –துணைப்பாடம் | 42 |
| | | 2.உ. முதலெழுத்தும் சார்பெழுத்தும் –இலக்கணம் | 44 |
| | | 2.ஊ. மொழியை ஆள்வோம் –மொழிப்பயிற்சி | 46 |
| | | 2.எ. மொழியோடு விளையாடு –மொழிப்பயிற்சி | 48 |
| | | 2.ஏ. திருக்குறள் * –செய்யுள் | 51 |
| 3. | அறிவியல், | 3.அ. அறிவியல் ஆத்திசூடி –செய்யுள் | 54 |
| | தொழில்நுட்பம் | 3.ஆ. அறிவியலால் ஆள்வோம் –செய்யுள் | 57 |
| | | 3.இ. கணியனின் நண்பன் –உரைநடை | 60 |
| | எந்திர உலகம் | 3.ஈ. ஒளி பிறந்தது –துணைப்பாடம் | 64 |
| | | 3.உ.மொழி முதல், இறுதி எழுத்துகள் –இலக்கணம் | 65 |
| | | 3.ஊ. மொழியை ஆள்வோம் –மொழிப்பயிற்சி | 66 |
| | | 3.எ. மொழியோடு விளையாடு –மொழிப்பயிற்சி | 69 |



(*) இக்குறியிட்ட பாடல்கள் மனப்பாடப்பகுதி

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



## தமிழ்
## இரண்டாம் பருவம்



| வ.எண் | இயல் | பாடத்தலைப்புகள் | பக்க எண் |
|---|---|---|---|
| | | மனப்பாடப்பகுதி * | 73 |
| 1. | கல்வி கண்ணெனத் தகும் | 1.அ. மூதுரை * –செய்யுள் | 75 |
| | | 1.ஆ. துன்பம் வெல்லும் கல்வி –செய்யுள் | 78 |
| | | 1.இ. கல்விக்கண் திறந்தவர் –உரைநடை | 82 |
| | | 1.ஈ. நூலகம் நோக்கி... –துணைப்பாடம் | 86 |
| | | 1.உ. இன எழுத்துகள் –இலக்கணம் | 89 |
| | | 1.ஊ. மொழியை ஆள்வோம்! –மொழிப்பயிற்சி | 90 |
| | | 1.எ. மொழியோடு விளையாடு –மொழிப்பயிற்சி | 94 |
| 2. | நாகரிகம், பண்பாடு பாடறிந்து ஒழுகுதல் | 2.அ. ஆசாரக்கோவை –செய்யுள் | 99 |
| | | 2.ஆ. கண்மணியே கண்ணுறங்கு –செய்யுள் | 103 |
| | | 2.இ. தமிழர் பெருவிழா –உரைநடை | 106 |
| | | 2.ஈ.மனம் கவரும் மாமல்லபுரம் –துணைப்பாடம் | 111 |
| | | 2.உ. மயங்கொலிகள் –இலக்கணம் | 115 |
| | | 2.ஊ. மொழியை ஆள்வோம்! –மொழிப்பயிற்சி | 117 |
| | | 2.எ. மொழியோடு விளையாடு –மொழிப்பயிற்சி | 122 |
| | | 2.ஏ. திருக்குறள் * –செய்யுள் | 124 |
| 3 | தொழில், வணிகம் கூடித் தொழில்செய் | 3.அ. நானிலம் படைத்தவன் –செய்யுள் | 129 |
| | | 3.ஆ. கடலோடு விளையாடு * –செய்யுள் | 134 |
| | | 3.இ. வளரும் வணிகம் –உரைநடை | 138 |
| | | 3.ஈ. உழைப்பே மூலதனம் –துணைப்பாடம் | 142 |
| | | 3.உ. சுட்டு எழுத்துகள், வினா எழுத்துகள் –இலக்கணம் | 145 |
| | | 3.ஊ. மொழியை ஆள்வோம்! –மொழிப்பயிற்சி | 148 |
| | | 3.எ. மொழியோடு விளையாடு –மொழிப்பயிற்சி | 150 |



(*) இக்குறியிட்ட பாடல்கள் மனப்பாடப்பகுதி

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



## தமிழ்
## மூன்றாம் பருவம்


| வ.எண் | இயல் | பாடத்தலைப்புகள் | பக்க எண் |
|---|---|---|---|
| | | மனப்பாடப்பகுதி * | 153 |
| 1 | நாடு, சமூகம் | 1.அ. பாரதம் அன்றைய நாற்றங்கால்* –செய்யுள் | 155 |
| | அரசு, நிருவாகம் | 1.ஆ. தமிழ்நாட்டில் காந்தி –உரைநடை | 159 |
| | புதுமைகள் | 1.இ. வேலுநாச்சியார் – துணைப்பாடம் | 163 |
| | செய்யும்தேசமிது | 1.ஈ. நால்வகைச் சொற்கள் – இலக்கணம் | 167 |
| | | 1.உ. மொழியை ஆள்வோம் – மொழிப்பயிற்சி | 169 |
| | | 1.ஊ. மொழியோடு விளையாடு – மொழிப்பயிற்சி | 176 |
| 2 | அறம்,தத்துவம், | 2.அ. பராபரக் கண்ணி* –செய்யுள் | 178 |
| | சிந்தனை | 2.ஆ. நீங்கள் நல்லவர் –செய்யுள் | 180 |
| | எல்லாரும் | 2.இ. பசிப்பிணி போக்கிய பாவை –உரைநடை | 182 |
| | இன்புற | 2.ஈ. பாதம் – துணைப்பாடம் | 189 |
| | | 2.உ. பெயர்ச்சொல் – இலக்கணம் | 191 |
| | | 2.ஊ. மொழியை ஆள்வோம் – மொழிப்பயிற்சி | 194 |
| | | 2.எ. மொழியோடு விளையாடு – மொழிப்பயிற்சி | 197 |
| | | 2.ஏ. திருக்குறள்* –செய்யுள் | 200 |
| 3 | மனிதம், | 3.அ. ஆசிய ஜோதி –செய்யுள் | 203 |
| | ஆளுமை | 3.ஆ. மனிதநேயம் –உரைநடை | 207 |
| | இன்னுயிர் | 3.இ. முடிவில் ஒரு தொடக்கம் – துணைப்பாடம் | 212 |
| | காப்போம் | 3.ஈ. அணி இலக்கணம் – இலக்கணம் | 214 |
| | | 1.உ. மொழியை ஆள்வோம் – மொழிப்பயிற்சி | 216 |
| | | 1.ஊ. மொழியோடு விளையாடு – மொழிப்பயிற்சி | 222 |


(*) இக்குறியிட்ட பாடல்கள் மனப்பாடப்பகுதி

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



# 6. தமிழ்

## மனப்பாடப்பகுதி

## முதல்பருவம்

### இயல்.1

**இன்பத்தமிழ்**

தமிழுக்கும் அமுதென்று பேர் ! – அந்தத்
தமிழ் இன்பத் தமிழ்எங்கள் உயிருக்கு நேர் !

தமிழுக்கு நிலவென்று பேர் ! – இன்பத்
தமிழ் எங்கள் சமூகத்தின் விளைவுக்கு நீர் !

தமிழுக்கு மணமென்று பேர் ! – இன்பத்
தமிழ் எங்கள் வாழ்வுக்கு நிருமித்த ஊர் !

**– பாரதிதாசன்**

### இயல்.2

**சிலப்பதிகாரம்**

திங்களைப் போற்றுதும் திங்களைப் போற்றுதும்
கொங்கு அலர்தார்ச் சென்னி குளிர் வெண்குடை போன்றுஇவ்
அங்கண் உலகு அளித்த லான்

ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும்
காவிரி நாடன் திகிரிபோல் பொற்கோட்டு
மேரு வலம் திரிதலான்

மாமழை போற்றுதும் மாமழை போற்றுதும்
நாம நீர் வேலி உலகிற்கு அவன் அளிபோல்
மேல்நின்று தான் சுரத்தலான்

**– இளங்கோவடிகள்**

www.Padasalai.Net

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**காணி நிலம்**

காணி நிலம் வேண்டும் – பராசக்தி
காணி நிலம் வேண்டும் – அங்குத்
தூணில் அழகியதாய் – நன்மாடங்கள்
துய்ய நிறத்தினதாய் – அந்தக்
காணி நிலத்திடையே – ஓர் மாளிகை
கட்டித் தரவேண்டும் – அங்குக்
கேணி அருகினிலே – தென்னைமரம்
கீற்றும் இளநீரும்
பத்துப் பன்னிரண்டு – தென்னைமரம்
பக்கத்திலே வேணும்

– **பாரதியார்**

**திருக்குறள்**

**வான்சிறப்பு**

3. கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய்மற்று ஆங்கே
எடுப்பதூஉம் எல்லாம் மழை

**மக்கட்பேறு**

6. ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய்

**அன்புடைமை**

7. அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு

**இனியவை கூறல்**

10. இனிய உளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று

– **திருவள்ளுவர்**

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



# செலக்சன்
# 6 தமிழ்
# முதல் பருவம்

இயல் ஒன்று

## 1. தமிழ்த்தேன்

கவிதைப்பேழை

இயல் ஒன்று

## 1.அ. இன்பத்தமிழ் –செய்யுள்

### மதிப்பீடு

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

**1. ஏற்றத் தாழ்வற்ற .......... அமைய வேண்டும்.**

அ) சமூகம் ஆ) நாடு இ) வீடு ஈ) தெரு

**விடை : அ) சமூகம்**

**2. நாள் முழுவதும் வேலை செய்து களைத்தவர்க்கு ............ ஆக இருக்கும்.**

அ) மகிழ்ச்சி ஆ) கோபம் இ) வருத்தம் ஈ) அசதி

**விடை : ஈ) அசதி**

**3. நிலவு + என்று என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் .............**

அ) நிலயென்று ஆ) நிலவென்று

இ) நிலவன்று ஈ) நிலவுஎன்று

**விடை : ஆ) நிலவென்று**

**4. தமிழ் + எங்கள் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ..........**

அ) தமிழங்கள் ஆ) தமிழெங்கள்

இ) தமிழுங்கள் ஈ) தமிழ்எங்கள்

**விடை : ஆ) தமிழெங்கள்**

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**5. "அமுதென்று" என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது**

அ) அமுது + தென்று ஆ) அமுது + என்று
இ) அமுது + ஒன்று ஈ) அமு + தென்று

**விடை:ஆ) அமுது+என்று**

**6. "செம்பயிர்" என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது**

அ) செம்மை + பயிர் ஆ) செம் + பயிர்
இ) செமை + பயிர் ஈ) செம்பு + பயிர்

**விடை:அ) செம்மை + பயிர்**

**II. இன்பத்தமிழ் – பாடலின்கருத்துக்கு ஏற்றபடி பொருத்துக.**

| | | |
|---|---|---|
| 1) விளைவுக்கு | – | பால் |
| 2) அறிவுக்கு | – | வேல் |
| 3) இளமைக்கு | – | நீர் |
| 4) புலவர்க்கு | – | தோள் |

**விடைகள் :**

| | | |
|---|---|---|
| **1) விளைவுக்கு** | **–** | **நீர்** |
| **2) அறிவுக்கு** | **–** | **தோள்** |
| **3) இளமைக்கு** | **–** | **பால்** |
| **4) புலவர்க்கு** | **–** | **வேல்** |

**III. ஒத்த ஓசையில் முடியும் (இயைபு) சொற்களை எடுத்து எழுதுக.**

**(எ.கா.) பேர் – நேர்**

**விடை** :1. பேர் – நீர் 4. வான் – தேன்
2. பேர் – ஊர் 5. தோள் – வாள்
3. பால் – வேல்

**IV. குறுவினா**

**1. பாரதிதாசன் தமிழுக்குச் சூட்டியுள்ள பெயர்கள் யாவை ?**

**விடை :** பாரதிதாசன் தமிழுக்குச் சூட்டியுள்ள பெயர்கள் :
அமுது, நிலவு, மணம்.

**2. நீங்கள் தமிழை எதனோடு ஒப்பிடுவீர்கள் ?**

**விடை :** நான் தமிழை "உயிரோடு" ஒப்பிடுவேன்.

**V. சிறுவினா**

**1. இன்பத்தமிழ் – பாடலில் உங்களுக்குப் பிடித்த அடிகள் இரண்டனை எழுதுக.**

**விடை :** தமிழ் எங்கள் உயர்வுக்குவான் ! – இன்பத்
தமிழ் எங்கள் அசதிக்குச் சுடர்தந்த தேன் !

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**2. பின்வரும் கவிதை அடிகளைப் படித்து மகிழ்க.**

*வான்தோன்றி வளி தோன்றி நெருப்புத் தோன்றி*
*மண் தோன்றி மழை தோன்றி மலைகள் தோன்றி*
*ஊன் தோன்றி உயிர் தோன்றி உணர்வு தோன்றி*
*ஒளி தோன்றி ஒலி தோன்றி வாழ்ந்த அந்நாள்*
*தேன் தோன்றியது போல மக்கள் நாவில்*
*செந்தமிழே! நீ தோன்றி வளர்ந்தாய் ! வாழி !*

**– வாணிதாசன்**

---

## உரைநடை உலகம்

**இயல் ஒன்று**

## 1.இ. வளர்தமிழ் –உரைநடை

### மதிப்பீடு

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

**1. 'தொன்மை' என்னும் சொல்லின் பொருள் ................**

அ) புதுமை ஆ) பழமை
இ) பெருமை ஈ) சீர்மை **விடை : ஆ) பழமை**

**2. 'இடப்புறம்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ..............**

அ) இடன் + புறம் ஆ) இடை + புறம்
இ) இடம் + புறம் ஈ) இடப் + புறம் **விடை : இ) இடம் + புறம்**

**3. 'சீரிளமை' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ....... .......**

அ) சீர் + இளமை ஆ) சீர்மை + இளமை
இ) சீரி + இளமை ஈ) சீற் + இளமை

**விடை : ஆ) சீர்மை + இளமை**

**4. சிலம்பு + அதிகாரம் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ...........**

அ) சிலம்பதிகாரம் ஆ) சிலப்பதிகாரம்
இ) சிலம்புதிகாரம் ஈ) சில பதிகாரம்

**விடை : ஆ) சிலப்பதிகாரம்**

**5. கணினி + தமிழ் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ..........**

அ) கணினிதமிழ் ஆ) கணினித்தமிழ்
இ) கணிணிதமிழ் ஈ) கனினிதமிழ்

**விடை : ஆ) கணினித்தமிழ்**

**6. "தமிழ்மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்" என்று பாடியவர் ..............**

அ) கண்ணதாசன் ஆ) பாரதியார்
இ) பாரதிதாசன் ஈ) வாணிதாசன் **விடை : ஆ) பாரதியார்**

**7. 'மா' என்னும் சொல்லின் பொருள் .............**

அ) மாடம் ஆ) வானம்
இ) விலங்கு ஈ) அம்மா **விடை : இ) விலங்கு**

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



## கூடுதல் வினாக்கள் – விடைகள்

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

**1. என்று பிறந்தவள் என்று உணராத இயல்பினளாம் எங்கள் தாய்! என்று பாடியவர்.**

அ) பாரதியார் ஆ) பாரதிதாசன்
இ) பெருஞ்சித்திரனார் ஈ) திரு.வி.க. **விடை : அ) பாரதியார்**

**2. பழமை என்னும் சொல்லின் எதிர்ச்சொல்.**

அ) எளிமை ஆ) முதுமை
இ) புதுமை ஈ) கூர்மை **விடை : இ) புதுமை**

**3. "வலஞ்சுழி" என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது**

அ) வலம் + சுழி ஆ) வலஞ் + சுழி
இ) வலது + சுழி ஈ) வல + சுழி **விடை : அ) வலம் + சுழி**

**II. கோடிட்ட இடத்தை நிரப்புக.**

1. கூர்மை என்னும் சொல்லின் பொருள்.......... ஆகும். **விடை : ஒழுங்குமுறை**
2. பனை, தென்னையின் இலைகளை.......... என அழைப்பர். **விடை : ஓலை**
3. உயர்திணையின் எதிர்ச்சொல்.........ஆகும். **விடை : அஃறிணை**
4. தமிழ் எழுத்துகள்.......... எழுத்துகளாகவே அமைந்துள்ளன. **விடை : வலஞ்சுழி**
5. உரைநடை வடிவங்களுள் ஒன்று .......... **விடை : கட்டுரை**
6. கவிதை வடிவங்களுள் ஒன்று ..........ஆகும். **விடை : துளிப்பா**
7. அரசு என்னும் சொல் இடம்பெறும் தமிழ் அறநூல்.......... **விடை : திருக்குறள்**

**III. குறுவினா.**

**1. 1 முதல் 10 வரையுள்ள அரபு எண்களை தமிழ் எண்களாக மாற்றுக.**

**விடை :**

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| க | உ | ங | ச | ரு | சா | எ | அ | கூ | க0 |

**IV. சிறுவினா.**

**1. தமிழ்மொழி எவ்வாறு இலக்கிய, இலக்கண வளம் நிறைந்தது ?**

**விடை :**

★ தொல்காப்பியம், நன்னூல் உள்ளிட்ட இலக்கண நூல்கள் மிகுந்தது தமிழ்மொழி.

★ எட்டுத்தொகை, பத்துப்பாட்டு ஆகிய சங்க இலக்கியங்களைக் கொண்டது.

★ திருக்குறள், நாலடியார் முதலிய அறநூல்கள் பலவும் நிறைந்தது.

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



★ அத்தையின் வழிகாட்டுதல்படி அரசுப் பள்ளியில் தமிழ்வழியில் அறிவியல் அறிஞர் ஆகலாம் என்ற கனவு நிறைவேறியது.
★ அத்தையின் கடிதப்படி அறிவியல் சிந்தையோடு விளங்கியவர்கள் தமிழர்கள் என அறிந்து கொண்டாள்.
★ நூல்கள் பல படித்து வந்ததால் இன்சுவை எண்ணம் நிறைவேறியது.
★ இன்சுவை தொடர்ந்து முயற்சி செய்து வந்ததால் சதீஷ்தவான் விண்வெளி ஆய்வு நிறுவனத்தில் பணியில் சேர முடிந்தது.

---

## கற்கண்டு

**இயல் ஒன்று**

## 1.உ. தமிழ் எழுத்துகளின் வகையும் தொகையும் – இலக்கணம்

**மதிப்பீடு**

**I. கொடுக்கப்பட்டுள்ள மாத்திரை அளவுக்கேற்பச்சொற்களை எழுதுக.**

1. உயிரெழுத்தில் தொடங்கும்இரண்டு மாத்திரை அளவுள்ள சொல் .....................
**விடை : அது**

2. இரண்டு மாத்திரை அளவுள்ள ஒரெழுத்துச் சொல் .........
**விடை : பூ**

3. ஆய்த எழுத்து இடம்பெறும் இரண்டரை மாத்திரை அளவுள்ள சொல் ....... **விடை : எஃகு**

---

**II. குறு வினா :**

**1. தமிழ் இலக்கணம் எத்தனை வகைப்படும் ? அவை யாவை ?**

**விடை :** தமிழ் இலக்கணம் ஐந்து வகைப்படும். அவை,

1. எழுத்து இலக்கணம் 2. சொல் இலக்கணம்
3. பொருள் இலக்கணம் 4. யாப்பு இலக்கணம்
5. அணி இலக்கணம்

---

**2. மெய்யெழுத்துக்களை மூவகை இனங்களாக வகைப்படுத்தி எழுதுக.**

**விடை : மெய்யெழுத்துக்களின் மூவகை இனங்கள் :**

1. வல்லினம் : எ.கா : க், ச், ட், த், ப், ற்
2. மெல்லினம் : எ.கா : ங், ஞ், ண், ந், ம், ன்
3. இடையினம் : எ.கா : ய், ர், ல், வ், ழ், ள்

---

**3. தமிழ் எழுத்துக்களுக்குரிய மாத்திரை அளவுகளைக் குறிப்பிடுக.**

**விடை :** உயிர் எழுத்துக்களில்

★ குறில் எழுத்தை ஒலிக்கும் கால அளவு – 1மாத்திரை.

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



★ நெடில் எழுத்தை ஒலிக்கும் கால அளவு – 2 மாத்திரை.
★ மெய் எழுத்துக்கள் ஒலிக்கும் கால அளவு – அரை மாத்திரை.
★ ஆய்த எழுத்தை ஒலிக்கும் கால அளவு – அரை மாத்திரை.

## கூடுதல் வினாக்கள் – விடைகள்

**I. சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. உயிர் எழுத்துக்களின் எண்ணிக்கை ..................

அ) 13 ஆ) 18 இ) 17 ஈ) 12 **விடை : ஈ) 12**

2. மெய் எழுத்துக்களின் எண்ணிக்கை............

அ) 18 ஆ) 12 இ) 14 ஈ) 15 **விடை : அ) 18**

**II. குறுவினா**

**1. எழுத்து என்றால் என்ன ?**

**விடை:** ஒலி வடிவாக எழுப்பப்படுவதும், வரி வடிவாக எழுதப்படுவதும் எழுத்து எனப்படுகிறது.

**2. உயிர் எழுத்துகள் யாவை ?**

**விடை:** உயிர் எழுத்துகள் பன்னிரண்டு அவை: அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ.

**3. ஒரு மாத்திரை என்பது யாது ?**

**விடை:** ஒரு மாத்திரை என்பது ஒரு முறை கண் இமைக்கவோ, ஒரு முறை கை நொடிக்கவோ ஆகும் கால அளவாகும்.

**4. குறில் எழுத்தை ஒலிக்கும் கால அளவு யாது ?**

**விடை:** குறில் எழுத்துகள் – அ, இ, உ, எ, ஒ
இவற்றை ஒலிக்கும் கால அளவு 1 மாத்திரை.

**5. நெடில் எழுத்தை ஒலிக்கும் கால அளவு யாது ?**

**விடை:** நெடில் எழுத்துகள் – ஆ, ஈ, ஊ, ஐ, ஏ, ஓ, ஔ
இவற்றை ஒலிக்கும் கால அளவு 2 மாத்திரை.

## கற்பவை கற்றபின்

**உங்கள் பெயர் மற்றும் உங்கள் நண்பர்களது பெயர்களுக்கான மாத்திரை அளவைக் கண்டுபிடி.**

(எ.கா) கபிலர் – 1 + 1 + 1 + ½ = 3 ½

விடை : 1. அக்பர் = 1 + ½ + 1 + ½ = 3 மாத்திரை.
2. சந்திரன் = 1 + ½ + 1+ 1 + ½ = 4 மாத்திரை.
3. கல்பனா = 1 + ½ + 1 + 2 = 4 ½ மாத்திரை.
4. முருகன் = 1 + 1 + 1 + ½ = 3 ½ மாத்திரை.

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



இயல் மூன்று

## 3. எந்திர உலகம்

கவிதைப்பேழை

இயல் மூன்று

## 3.அ. அறிவியல் ஆத்திசூடி –செய்யுள்

### மதிப்பீடு

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

**1. உடல் நோய்க்கு .................... தேவை.**

அ) ஔடதம் ஆ) இனிப்பு இ) உணவு ஈ) உடை

**விடை : அ) ஔடதம்**

**2. நண்பர்களுடன் .................. விளையாடு.**

அ) ஒருமித்து ஆ) மாறுபட்டு இ) தனித்து ஈ) பகைத்து

**விடை : அ)ஒருமித்து**

**3. "கண்டறி" என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ..............**

அ) கண் + அறி ஆ) கண்டு + அறி

இ) கண்ட + அறி ஈ) கண் + டறி

**விடை : ஆ) கண்டு + அறி**

**4. ஒய்வற என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ......**

அ) ஒய்வு + அற ஆ) ஒய் + அற

இ) ஒய் + வற ஈ) ஒய்வு + வற

**விடை : அ) ஒய்வு + அற**

**5. ஏன் + என்று என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல்.**

அ) ஏன்என்று ஆ) ஏனென்று

இ) ஏன்னென்று ஈ) ஏனன்று

**விடை : ஆ) ஏனென்று**

**6. ஔடதம் + ஆம் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல்.**

அ) ஔடதமாம் ஆ) ஔடதம்ஆம்

இ) ஔடதாம் ஈ) ஔடதஆம்

**விடை : அ) ஔடதமாம்**

---

**II. எதிர்ச்சொற்களைப் பொருத்துக. விடைகள் :**

| | | |
|---|---|---|
| 1.அணுகு | x | தெளிவு |
| 2.ஐயம் | x | சோர்வு |
| 3.ஊக்கம் | x | பொய்மை |
| 4.உண்மை | x | விலகு |

**விடைகள் :**

| | | |
|---|---|---|
| 1.அணுகு | x | விலகு |
| 2.ஐயம் | x | தெளிவு |
| 3.ஊக்கம் | x | சோர்வு |
| 4.உண்மை | x | பொய்மை |

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



## கவிதைப்பேழை

**இயல் மூன்று**

## 3.ஆ. அறிவியலால் ஆள்வோம் –செய்யுள்

**மதிப்பீடு**

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

**1. மனிதன் எப்போதும் உண்மையையே ............**

அ) உரைக்கின்றான் ஆ) உழைக்கின்றான்
இ) உறைகின்றான் ஈ) உரைகின்றான்

**விடை : அ) உரைக்கின்றான்**

**2. ஆழக்கடல் என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது .........**

அ) ஆழமான + கடல் ஆ) ஆழ் + கடல்
இ) ஆழ + கடல் ஈ) ஆழம் + கடல்

**விடை : ஈ) ஆழம் + கடல்**

**3. விண்வெளி என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ...........**

அ) விண் + வளி ஆ) விண் + வெளி
இ) விண் + ஒளி ஈ) விண் + வொளி

**விடை : ஆ) விண் + வெளி**

**4. நீலம் + வான் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல்.**

அ) நீலம்வான் ஆ) நீளம்வான்
இ) நீலவான் ஈ) நீலவ்வான் **விடை : இ) நீலவான்**

**5. இல்லாது + இயங்கும் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல்.**

அ) இல்லாது இயங்கும் ஆ) இல்லாஇயங்கும்
இ) இல்லாதியங்கும் ஈ) இல்லதியங்கும்

**விடை : இ) இல்லாதியங்கும்**

---

**II. நயம் அறிக.**

**1. பாடலில் இடம்பெற்றுள்ள மோனைச் சொற்களை எழுதுக.**

**விடை:** பாடலின் அடிகளிலோ, சீர்களிலோ முதலெழுத்து ஒன்றுபோல வருவது மோனை எனப்படும்.

**அடிமோனை :**

1. ஆழக் 2. நாளை
ஆய்வுகள் நகரம்

**சீர்மோனை :**

1. செய்தித் – சிறக்கின்றான்
2. உடலும் – உயிரும்

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



விரிவானம்

இயல் மூன்று

## 3.ஈ. ஒளி பிறந்தது
( அப்துல்கலாமுடன் நேர்காணல்)
–துணைப்பாடம்

**மதிப்பீடு**

**I. சிறுவினா.**

**1. சுதந்திர இந்தியா அடைந்த வெற்றிகளாக அப்துல்கலாம் எவற்றைக் குறிப்பிடுகிறார்.**

**விடை:** ★ உணவு உற்பத்தியில் தன்னிறைவு அடைந்துள்ளோம்.

★ தகவல் தொழில்நுட்பத் துறையில் மிகுதியான வளர்ச்சி பெற்றுள்ளோம்.

★ எவ்வகையான செயற்கைக் கோளையும் ஏவும் திறன் நம்மிடம் உள்ளது.

★ அணு உலைகள் மூலம் மின்சாரம் தயாரிப்பதில் முன்னணியில் உள்ளோம்.

★ நவீன மருந்துகளும் பாரம்பரிய மருத்துவ முறைகளும் வளர்ச்சி பெற்றுள்ளன.

★ பாதுகாப்புத் துறையைப் பொறுத்தவரை 'அக்னி' மற்றும் 'பிரித்வி' ஏவுகணைகளைச் செலுத்துவதில் வெற்றி பெற்றுள்ளோம்.

---

**2. தமக்குப் பெருமகிழ்வை அளித்ததாக அப்துல்கலாம் குறிப்பிடும் நிகழ்வு யாது ?**

**விடை: தமக்குப் பெருமகிழ்வை அளித்ததாக அப்துல்கலாம் குறிப்பிடும் நிகழ்வு:**

★போலியோவினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு, மூன்று கிலோ எடைக்குப் பதிலாக கார்பன் இழையை கொண்டு முந்நூறு கிராம் எடையில் செயற்கை கால்கள் உருவாக்கப்பட்டன.

★அதனை அவர்கள் அணிந்து மகிழ்ந்த நிகழ்ச்சி தான் எனக்குப் பெருமகிழ்வை அளித்தது.

---

**கூடுதல் வினாக்கள் – விடைகள்**

**I. குறுவினா**

**1. சூரியனுக்கு செல்ல முடியுமா ?**

**விடை:** சூரியனின் வெப்பத்தைத் தாங்கும் அளவுக்கு இன்றைய சூழலில் கவசங்கள் இல்லை.

★வருங்காலத்தில் அதிகபட்ச வெப்பத்தைத் தாங்கும் கருவிகள் கண்டறியப்படலாம்.

★அப்போது மனிதன் சூரியனை சென்றடையலாம்.

---

**2. அப்துல்கலாம் எழுதிய நூல்கள் யாவை ?**

**விடை:** அக்னிச் சிறகுகள், இந்தியா 2020, எழுச்சி தீபங்கள், அப்புறம் பிறந்தது, ஒரு புதிய குழந்தை.

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



★ அருகில் உள்ளவரிடம் அலைபேசியை வாங்கி வீட்டிற்குத் தகவல் தருவேன்.

★ ஊருக்கு நடந்தே செல்லத் தொடங்குவேன்.

**விடை : அருகில் உள்ளவரிடம் அலைபேசியை வாங்கி வீட்டிற்குத் தகவல் தருவேன்.**

**IX. நிற்க அதற்குத் தக......**

***என் பொறுப்புகள்....***
***அறிவியல் கருவிகளை நன்மைக்கு மட்டும் பயன்படுத்துவேன்***


**X. கலைச்சொற்கள் அறிவோம் :**


1. செயற்கை நுண்ணறிவு – Artificial Intelligence
2. மீத்திறன் கணினி – Super Computer
3. செயற்கைக் கோள் – Satellite
4. நுண்ணறிவு – Intelligence

**XI. இணையத்தில் காண்க**

**திரட்டுக.**

**பல்வகை எந்திர மனிதர்களின் படங்களை இணையத்தில் சேகரித்துப் படத்தொகுப்பு உருவாக்குக.**



www.Padasalai.Net

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



# செலக்சன்
# 6 தமிழ்
# இரண்டாம் பருவம்

**மனப்பாடப்பகுதி**

**இரண்டாம் பருவம்**

**இயல் .1**

**மூதுரை**

மன்னனும் மாசறக் கற்றோனும் சீர்தூக்கின்
மன்னனின் கற்றோன் சிறப்புடையன் – மன்னற்குத்
தன்தேசம் அல்லால் சிறப்பில்லை கற்றோர்க்குச்
சென்ற இடமெல்லாம் சிறப்பு.

– ஔவையார்

www.Padasalai.Net

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



இயல் ஒன்று

# 1. கண்ணெனத் தகும்

இயல் ஒன்று

## கவிதைப்பேழை

## 1.அ. மூதுரை – செய்யுள்

### மதிப்பீடு

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

**1. மாணவர்கள் நூல்களை........................கற்கவேண்டும்.**

அ) மேலோட்டமாக ஆ) மாசுற

இ) மாசற ஈ) மயக்கமுற **விடை : இ) மாசற**

**2. இடமெல்லாம் என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது.**

அ) இடம் + மெல்லாம் ஆ) இடம் + எல்லாம்

இ) இட + எல்லாம் ஈ) இட + மெல்லாம்

**விடை : ஆ) இடம் + எல்லாம்**

**3. மாசற எனும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது.**

அ) மாச + அற ஆ) மாசு + அற

இ) மாச + உற ஈ) மாசு + உற **விடை : ஆ) மாசு+ அற**

**4. குற்றம் + இல்லாதவர் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல்.**

அ) குற்றமில்லாதவர் ஆ) குற்றம்இல்லாதவர்

இ) குற்றமல்லாதவர் ஈ) குற்றம்அல்லாதவர்

**விடை : அ) குற்றமில்லாதவர்**

**5. சிறப்பு + உடையார் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல்.**

அ) சிறப்புஉடையார் ஆ) சிறப்புடையார்

இ) சிறப்படையார் ஈ) சிறப்பிடையார்

**விடை : ஆ) சிறப்புடையார்**

---

**II. குறுவினா :**

**கற்றவரின் பெருமைகளாக மூதுரை கூறுவன யாவை ?**

**விடை : <u>கற்றவரின் பெருமைகளாக மூதுரை கூறுவன :</u>**

★ மன்னனையும், கற்றவரையும் ஒப்பிட்டு ஆராய்ந்து பார்த்தால், மன்னனுக்குத் தன் நாட்டில் மட்டுமே சிறப்பு கிடைக்கும்.

★ கல்வி கற்றவருக்குச் சென்ற இடங்களில் எல்லாம் சிறப்பு கிடைக்கிறது.

---

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



## கற்கண்டு

இயல் ஒன்று

## 1.உ. இன எழுத்துகள் –இலக்கணம்

### மதிப்பீடு

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

**1. மெல்லினத்திற்கான இன எழுத்து இடம்பெறாத சொல் எது ?**

அ) மஞ்சள் ஆ) வந்தான்

இ) கண்ணில் ஈ) தம்பி **விடை: இ) கண்ணில்**

**2. தவறான சொல்லை வட்டமிடுக.**

அ)கண்டான் ஆ) வென்ரான்

இ) நண்டு ஈ) வண்டு

**விடை: ஆ) வென்ரான்**

---

**II. பின்வரும் சொற்களைத் திருத்தி எழுதுக.**

**விடை:**

| **பிழை** | **திருத்தம்** |
|---|---|
| தெண்றல் | தென்றல் |
| கன்டம் | கண்டம் |
| நன்ரி | நன்றி |
| மன்டபம் | மண்டபம் |

---

**III. குறுவினா :**

**இன எழுத்துகள் என்றால் என்ன ?**

**விடை:** ★ சில எழுத்துகளுக்கு இடையே ஒலிக்கும் முயற்சி, பிறக்கும் இடம் ஆகியவற்றில் ஒற்றுமை உள்ள எழுத்துகள் இன எழுத்துகள் எனப்படும்.

---

### கூடுதல் வினாக்கள்–விடைகள்

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

**1. வல்லின எழுத்துகளின் எண்ணிக்கை.**

அ) எட்டு ஆ) ஆறு இ) மூன்று ஈ) ஐந்து **விடை :ஆ) ஆறு**

**2. மெல்லின எழுத்துகளின் எண்ணிக்கை.**

அ) இரண்டு ஆ) எட்டு இ) மூன்று ஈ) ஆறு **விடை : ஈ) ஆறு**

---

**II. கோடிட்ட இடத்தை நிரப்புக.**

1. சொற்களில் மெல்லின மெய் எழுத்தை அடுத்து அதன் இனமாகிய ............. எழுத்து வரும். **விடை : வல்லின**

2. இன எழுத்து இல்லாத எழுத்து ............... ஆகும். **விடை : ஆய்தம்**

3. ............... எழுத்துகளில் குறிலுக்கு நெடிலும் நெடிலுக்குக் குறிலும் இன எழுத்துகள் ஆகும். **விடை : உயிர்**

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**III. கீழ்க்காணும் கட்டங்களில் உள்ள இன எழுத்துச் சொற்களை வட்டமிட்டுத் தனியாக எடுத்து எழுதுக.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ம | ண் | ட | ப | ம் | அ |
| ற | தி | க | ந் | கி | ச |
| கி | பி | ம் | து | ளி | ங் |
| தெ | ன் | ற | ல் | ங் | கு |
| ள் | வி | ம | ஞ் | ச | ள் |

விடை : மண்டபம், பந்து, சங்கு, தென்றல், மஞ்சள், தும்பி

**IV. செயல்திட்டம் :**

**காமராசர் குறித்த செய்திகள் மற்றும் புகைப்படங்களுடன் ஒரு படத்தொகுப்பு (Album) உருவாக்கவும்.**

**விடை :**

**பெயர் :** காமராசர்

**இயற்பெயர் :** காமாட்சி

**பிறப்பு :** 15.07.1903

**பிறந்த ஊர் :** விருதுநகர்

**தந்தை :** குமாரசாமி

**தாயார் :** சிவகாமி அம்மையார்

**திருமணம் :** விரும்பவில்லை

**கட்சி :** காங்கிரஸ்

**பங்கேற்ற விடுதலைப் போராட்டங்கள் :**

★ சைமன்குழு எதிர்ப்புப் போராட்டம்.

★ உப்புச் சத்தியா கிரகப் போராட்டம்.

★ வெள்ளையனே வெளியேறு போராட்டம்.

**சென்னையில் முதல்வரான ஆண்டு :** 1954

**தமிழகத்தில் முதல்வர் பதவி :** ஒன்பது ஆண்டுகள்

**மறைவு :** 02.10.1975

**கல்விப்பணி :** இலவசக் கல்விச் சட்டம், மதிய உணவுத் திட்டம்.

**காமராசருக்கு தமிழக அரசு செய்த சிறப்புகள் :**

★ மதுரை பல்கலைக்கழகத்திற்கு மதுரை காமராசர் பல்கலைக் கழகம் எனப் பெயர் சூட்டப்பட்டது.


★ சென்னை மெரினா கடற்கரையில் சிலை.

★ கன்னியாகுமரியில் மணி மண்டபம்.

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in










**V. நிற்க அதற்குத் தக...**
**என் பொறுப்புகள் :**

1. கல்வியின் சிறப்பை உணர்ந்துள்ளேன்.
2. தொடர்ந்து கல்வி கற்பேன்.
3. கல்வியால் எனது குறிக்கோளை அடைவேன்.
4. கல்வியால் சிறந்தவர்களை என் முன்னோடிகளாகக் கொள்வேன்.
5. புத்தகம் படிக்கும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்வேன்.

**VI. கலைச்சொல் அறிவோம் :**

| | | |
|---|---|---|
| கல்வி | – | *Education* |
| தொடக்கப் பள்ளி | – | *Primary School* |
| மேல்நிலைப் பள்ளி | – | *Higher Secondary School* |
| நூலகம் | – | *Library* |
| மின்படிக்கட்டு | – | *Escalator* |
| மின்தூக்கி | – | *Lift* |
| மின்னஞ்சல் | – | *E - Mail* |
| குறுந்தகடு | – | *Compact Disk (CD)* |
| மின்நூலகம் | – | *E - Library* |
| மின்நூல் | – | *E - Book* |
| மின் இதழ்கள் | – | *E - Magazine* |

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



இயல் மூன்று

## 3. கூடித் தொழில் செய்

கவிதைப்பேழை

இயல் மூன்று

## 3.அ. நானிலம் படைத்தவன்

–செய்யுள்

### மதிப்பீடு

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

**1. போர்க்களத்தில் வெளிப்படும் குணம்..................**

அ) மகிழ்ச்சி ஆ) துன்பம்

இ) வீரம் ஈ) அழுகை **விடை : இ) வீரம்**

**2. கல்லெடுத்து என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது -------------**

அ) கல் + அடுத்து ஆ) கல் + எடுத்து

இ) கல்+லடுத்து ஈ) கல்+லெடுத்து **விடை:ஆ) கல்+எடுத்து**

**3. நானிலம் என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ------**

அ) நா+னிலம் ஆ) நான்கு+நிலம்

இ) நா+நிலம் ஈ) நான்+நிலம் **விடை : ஆ) நான்கு+நிலம்**

**4.நாடு + என்ற என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் -------**

அ) நாடென்ற ஆ) நாடன்ற

இ) நாடுஎன்ற ஈ) நாடுஅன்ற **விடை : அ) நாடென்ற**

**5. கலம் + ஏறி என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் -----------**

அ) கலம்ஏறி ஆ) கலமறி

இ)கலன்ஏறி ஈ) கலமேறி **விடை : ஈ) கலமேறி**

---

**II. சொற்றொடரில் அமைத்து எழுதுக.**

**அ) மாநிலம்**

**விடை :** தமிழ்நாடு எனது **மாநிலம்** ஆகும்.

**ஆ) கடல்**

**விடை : கடல்** பரந்து விரிந்துள்ளதால் அதனை பரவை என அழைப்பர்.

**இ) பண்டங்கள்**

**விடை :** அக்காலத்தில் ஏற்றுமதி செய்யப்பட்ட ஏலம், மிளகு **பண்டங்கள்** என்று அழைக்கப்பட்டன.

---



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



## உரைநடை உலகம்

**இயல் மூன்று**

## 3.இ. வளரும் வணிகம்

– உரைநடை

### மதிப்பீடு

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

**1. வீட்டுப் பயன்பாட்டிற்காகப் பொருள் வாங்குபவர்.................. .**

அ) நுகர்வோர் ஆ) தொழிலாளி

இ) முதலீட்டாளர் ஈ) நெசவாளி **விடை : அ) நுகர்வோர்**

**2. வணிகம் + சாத்து என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல்............... .**

அ) வணிகசாத்து ஆ) வணிகம்சாத்து

இ) வணிகச்சாத்து ஈ) வணிகத்துசாத்து

**விடை : இ) வணிகச்சாத்து**

**3. பண்டம் +மாற்று என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல்............... .**

அ) பண்டமாற்று ஆ) பண்டம்மாற்று

இ) பண்மாற்று ஈ) பண்டுமாற்று **விடை : அ) பண்டமாற்று**

**4. மின்னணு என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது....... .**

அ) மின் + னணு ஆ) மின்ன + அணு

இ) மின்னல் + அணு ஈ) மின் + அணு **விடை : ஈ) மின் + அணு**

**5. விரிவடைந்த என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது...... .**

அ) விரி + வடைந்த ஆ) விரி + அடைந்த

இ) விரிவு + அடைந்த ஈ) விரிவ் + அடைந்த

**விடை : இ) விரிவு+அடைந்த**

---

**II. பின்வரும் சொற்களைச் சொற்றொடரில் அமைத்து எழுதுக.**

**அ) வணிகம்**

**விடை :** அரசு வேலை கிடைக்காதவர்களுக்கு **வணிகம்** மாற்று வழியாகும்.

**ஆ) ஏற்றுமதி**

**விடை :** மல்லிகை பசை அயல்நாடுகளுக்கு **ஏற்றுமதி** செய்யப்படுகிறது.

**இ) சில்லறை**

**விடை :** பொருட்களை வாங்கச் செல்லும்போது **சில்லறை**யுடன் சென்றால் நலம்.

**ஈ) கப்பல்**

**விடை : கப்பல்**கள் வந்து நிற்கும் இடம் துறைமுகம்.

---

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**2. பத்தியில் உள்ள வினாச் சொற்களை எடுத்து எழுதுக.**

செழியன் துணிக்கடைக்குச் சென்றான். விற்பனையாளர் ஒருவரிடம் "ஆயத்த ஆடைகள் பகுதி எங்கு உள்ளது ? " என்று வினவினான். "யாருக்கு ஆடை வேண்டும் ? உனக்கா பெரியவர்களுக்கா ?" என்று கேட்டார் விற்பனையாளர். "ஏன் அப்படிக் கேட்கிறீர்கள். சிறுவர்களுக்கான ஆடைகள் இல்லையோ ?" என்று வினவினான். " நீ கேட்பது உன் அளவுக்குரிய ஆடைதானே ? அதோ அந்தப் பகுதியில் இருக்கிறது" என்றார் விற்பனையாளர்.

**விடை :** எங்கு ?, யாருக்கு ?, உனக்கா ?, பெரியவர்களுக்கா ?, ஏன் ?, இல்லையோ ?, ஆடைதானே ?.

---

**இயல் மூன்று**

## 3.ஊ. மொழியை ஆள்வோம் !

**– மொழிப்பயிற்சி**

**I. சொற்றொடர்ப் பயிற்சி.**

**அ) அந்த, இந்த என்னும் சுட்டுச்சொற்களை அமைத்துத் தொடர்கள் எழுதுக.**

**விடை :** யார் **அந்தப்** பெண் ?

**இந்த**க் காலணி உன்னுடையதா ?

**ஆ) எங்கே, ஏன், யார் ஆகிய வினாச்சொற்களை அமைத்துத் தொடர்கள் எழுதுக.**

**விடை :** தமிழ்நாட்டில் திருவள்ளுவர் சிலை **எங்கே** உள்ளது ?

அதிகாலையில் நாம் **ஏன்** எழவேண்டும் ?

ஆதிச்சூடியை எழுதியவர் **யார்** ?

---

**II. சொற்களைச் சேர்த்துச் சொற்றொடரை நீட்டி எழுதுக.**

அ) நான் பள்ளியில் படிக்கிறேன். (ஆறாம் வகுப்பு, அரசு)

**விடை :** நான் அரசுப் பள்ளியில் ஆறாம் வகுப்பு படிக்கிறேன்.

ஆ) பொன்னன் முன்னேறினான். (வணிகம் செய்து, பொருளீட்டி, துணி)

**விடை :** பொன்னன் துணி வணிகம் செய்து பொருளீட்டி முன்னேறினான்.

---

**III. பின்வரும் கட்டங்களில் உள்ள சொற்களைக் கொண்டு சொற்றொடர்கள் அமைக்க.**

| | | |
|---|---|---|
| நீ<br>நான்<br>அவன்<br>அவள்<br>அவர் | ஊருக்குச் | சென்றாய்<br>சென்றார்<br>சென்றேன்<br>சென்றான்<br>சென்றாள் |

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**3.வணிகத்தின் நோக்கம் என்ன ?**

**விடை :** மனிதர்களுக்குத் தேவையான எல்லாப் பொருட்களையும் கிடைக்கச் செய்வதே வணிகத்தின் நோக்கம் ஆகும்.

**4.மதிப்புக் கூட்டுதல் என்றால் என்ன ?**

**விடை :** கிடைக்கும் பொருள்களின் மதிப்பைக் கூட்டிப்புதிய பொருளாக மாற்றுவது மதிப்புக் கூட்டுதல் எனப்படும்.

எ.கா. கல்லை செதுக்கிச் சிலையாக மாற்றலாம். உதிரும் கல்தூளைக் கோலமாவாக மாற்றலாம்.

**5. இப்பத்திக்கு ஏற்ற தலைப்பை எழுதுக.**

**விடை :** வளரும் வணிகம்

---

## VII. கடிதம் எழுதுக.

**பிறந்தநாள் பரிசு அனுப்பிய மாமாவுக்கு நன்றி தெரிவித்துக் கடிதம் எழுதுக.**

தேதி : ...............

மதுரை

அன்பும் பண்பும் மிக்க மாமாவுக்கு,

நலம் நலமறிய ஆவல். டிசம்பர் 24 அன்று என்னுடைய பிறந்தநாளை முன்னிட்டு நீங்கள் அனுப்பிய பரிசு மிகவும் அருமையாக இருந்தது. அது மட்டும் இல்லாமல் அப்பரிசு எனக்குள் எதிர்கால இலட்சியத்தைத் தோற்றுவித்துள்ளது. நான் இப்பொழுது எதிர்காலக் கனவை நோக்கிச் செல்கிறேன்.

நீங்கள் நேரில் வந்து வாழ்த்தவில்லை என்ற கவலை இருந்தாலும் நீங்கள் அனுப்பிய பரிசு என்மேல் உங்களுக்கு இருக்கும் அன்பையும் கடமையையும் காட்டுகிறது. மாமா நீங்கள் அனுப்பிய பரிசுக்காக நன்றி தெரிவிக்கிறேன். உங்களை நேரில் காண ஆசையாக உள்ளது.

இப்படிக்கு,
அன்புமிக்க,
க. ராதிகா

உறைமேல் முகவரி

பெறுநர்,
த. மூர்த்தி
28. பாரதி தெரு,
திண்டுக்கல்.

---

## இயல் மூன்று

## 3.எ. மொழியோடு விளையாடு

– மொழிப்பயிற்சி

**I. விடுகதைக்கு விடை காணுங்கள்.**

(கப்பல், ஏற்றுமதி இறக்குமதி, தராசு, நெல்மணி, குதிரை)

1. தனி ஆளாய் இருந்தால் நடுநிலையாய் இருந்திடுவான் ; யாரும் வந்து அமர்ந்தால் ஏற்றம் இறக்கம் காட்டிடுவான். அவன் யார் ?

**விடை : தராசு**

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



## IV. குறுக்கெழுத்துப் புதிர்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 மு | டி | ய | ர | ச | ன் | |
| ல் | | 2 சு | ட் | டு | | ம் |
| லை | | | | | | ட |
| | | | | டை | | ட் |
| 3 வே | | ரை | தி | 4 கு | | மூ |
| லி | | | | | | னி |
| | று | ற் | மா | ட | ண் | 5 ப |

**இடமிருந்து வலம்**

1. நானிலம் படைத்தவன் பாடலை எழுதியவர். **விடை : முடியரசன்**
2. சுட்டிக்காட்டப் பயன்படுவது................ எழுத்து. **விடை : சுட்டு**

**வலமிருந்து இடம்**

4. அரேபியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டது. **விடை : குதிரை**
5. ஒரு பொருளைக் கொடுத்து வேறு பொருளைப் பெறும் முறை. **விடை : பண்டமாற்று**

**மேலிருந்து கீழ்**

1. காடும் காடு சார்ந்த இடமும். **விடை : முல்லை**
3. தோட்டத்தைச் சுற்றி ...............அமைக்க வேண்டும். **விடை : வேலி**

**கீழிருந்து மேல்**

4. மீனவருக்கு மேகம்..............போன்றது. **விடை : குடை**
5. உடலுக்குப் போர்வையாக அமைவது. **விடை : பனிமூட்டம்**

## V. நிற்க அதற்குத் தக...

**என் பொறுப்புகள்**

1. இந்தியக் குடிமகனாக எனது கடமையை நிறைவேற்றுவேன்.
2. கலப்படம் பற்றிய விழிப்புணர்வை மக்களிடம் ஏற்படுத்துவேன்.
3. நெகிழிப் பயன்பாட்டை இயன்றவரை தவிர்ப்பேன்.
4. கடைக்குச் செல்லும் போது துணிப்பைகளை எடுத்துச் செல்வேன்.

## VI. கலைச்சொல் அறிவோம்

பண்டம் – Commodity
பயணப்படகுகள் – Ferries
பாரம்பரியம் – Heritage
நுகர்வோர் – Consumer
கடற்பயணம் – Voyage
தொழில் முனைவோர் – Enterpreneur
கலப்படம் – Adulteration
வணிகர் – Merchant

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



# செலக்சன்
# 6 தமிழ்
# மூன்றாம் பருவம்

## மனப்பாடப்பகுதி

### இயல்.1

**பாரதம் அன்றைய நாற்றங்கால்**

புல்வெளி யெல்லாம் பூக்கா டாகிப்
புன்னகை செய்த பொற்காலம்!
கல்லைக் கூட காவிய மாக்கிக்
கட்டி நிறுத்திய கலைக்கூடம்! ( புதுமைகள் )

அன்னை நாட்டின் அமுத சுரபியில்
அன்னிய நாடுகள் பசிதீர
அண்ணல் காந்தியின் சின்னக் கைத்தடி
அறத்தின் ஊன்று கோலாக

புதுமைகள் செய்த தேசமிது
பூமியின் கிழக்கு வாசலிது! – தாராபாரதி

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



## இயல்.2

### பராபரக் கண்ணி

தம்உயிர்போல் எவ்வுயிரும் தானென்று தண்டருள்கூர்
செம்மையருக்கு ஏவல்என்று செய்வேன் பராபரமே!

எல்லாரும் இன்புற்று இருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன்று அறியேன் பராபரமே!

### திருக்குறள்

**அறன் வலியுறுத்தல்**

1. மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்
ஆகுல நீர பிற.

**இன்னாசெய்யாமை**

5. இன்னாசெய் தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயம் செய்து விடல்.

**கொல்லாமை**

8. பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாம் தலை.

www.Padasalai.Net

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**2. காந்தியடிகள் நடத்திய அறவழிப் போராட்டங்களின் பெயர்களைத் தொகுக்க.**

1. 1919 – ரௌலட் சட்டம் எதிர்ப்பு
2. 1920 – ஒத்துழையாமை இயக்கம்
3. 1922– சௌரி சௌரா போராட்டம்
4. 1930 – உப்புச் சத்தியாக்கிரகம் (தண்டி யாத்திரை), சட்ட மறுப்பு இயக்கம்
5. 1942 – வெள்ளையனே வெளியேறு இயக்கம்

---

## விரிவானம்

இயல் ஒன்று

## 1.இ. வேலுநாச்சியார்

– துணைப்பாடம்

**மதிப்பீடு**

**1. வேலுநாச்சியார் சிவகங்கையை மீட்ட நிகழ்வைச் சுருக்கமாக எழுதுக.**

**விடை :**

★ வேலுநாச்சியாரின் படைவீரர்களுடன் ஐதர்அலியின் ஐயாயிரம் குதிரைப் படை வீரர்களும் சேர்ந்தனர்.

★ ஆண்கள் படைப்பிரிவிற்கு மருது சகோதரர்களும், பெண்கள் படைப் பிரிவிற்கு குயிலியும் தலைமை ஏற்றனர்.

★ விசயதசமித் திருநாளில் சிவகங்கை கோட்டைக்குள் செல்வதற்குப் பெண்களுக்கு மட்டுமே அனுமதி உண்டு.

★ பெண்கள் படைப்பிரிவினர் கூடைகளில் பூக்கள், பழங்கள் ஆகியவற்றுடன் ஆயுதங்களையும் மறைத்துக்கொண்டு கோட்டைக்குள் சென்றனர்.

★ உள்ளே சென்றதும் குயிலி தம் உடலில் தீ வைத்துக்கொண்டு ஆயுதக் கிடங்குக்குள் குதித்துவிட்டார்.

★ தீ எரிவது தெரிந்ததும் ஆண்கள் படைப்பிரிவினர் வேலுநாச்சியார் ஆணைப்படி கோட்டைக்குள் சென்றனர்.

★ ஆங்கிலேயரின் படையுடன் கடுமையாகப் போரிட்டனர்.

★ இறுதியில் ஆங்கிலப்படை தோல்வியடைந்து கோட்டையை விட்டு ஓடியது.

★ வேலுநாச்சியாரின் வீரம், மருது சகோதரர்களின் ஆற்றல், ஐதர்அலியின் உதவி ஆகியவற்றோடு குயிலியின் தியாகமும் இணைந்ததால் சிவகங்கை மீட்கப்பட்டது.

---

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



## கற்பவை கற்றபின்

**இக்கதையை நாடகமாக வகுப்பறையில் நடித்துக் காட்டுக.**

இராமநாதபுரத்தை ஆட்சி செய்த செல்லமுத்து மன்னரின் ஒரே மகள் வேலுநாச்சியார். சிவகங்கை மன்னர் முத்துவடுகநாதரை மணந்து மகிழ்ச்சியோடு வாழ்ந்து வந்தார்

காளையார்கோவிலில் நடைபெற்ற போரில் முத்துவடுகநாதர் ஆங்கிலப் படையுடன் போரிட்டு வீரமரணம் அடைந்தார். வேலுநாச்சியார் ஆங்கிலேயரை வென்று சிவகங்கையை மீட்க உறுதி பூண்டார். திண்டுக்கல் கோட்டையில் தங்கி ஒரு படையைத் திரட்டிப் பயிற்சி அளித்தார்.

எட்டு ஆண்டுகளுக்குப் பின்:

**காட்சி 1**

**இடம் :** திண்டுக்கல் கோட்டை

**பங்குகொண்டவர்கள் :** வீரமங்கை வேலுநாச்சியார், அமைச்சர் தாண்டவராயர், தளபதிகளாகிய பெரியமருது, சின்னமருது, குறுநில மன்னர்கள்

**வேலுநாச்சியார் (மாணவி 1) :** நாம் சிவகங்கையை இழந்து எட்டு ஆண்டுகள் ஆகிவிட்டன

**அமைச்சர் தாண்டவராயர் (மாணவன்2):** "கவலைப்படாதீர்கள் அரசியாரே, நாம் சிவகங்கையை மீட்கும் நாள் நெருங்கிவிட்டது".

**வேலுநாச்சியார் (மாணவி 1) :** அந்த இனிய நாளைத்தான் நானும் ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டு இருக்கிறேன்.

அப்போது வெளியே பெரும் ஆரவாரம் கேட்டது.

**வேலுநாச்சியார் (மாணவி 1) :** மைசூரிலிருந்து ஐதர்அலி அனுப்பிய படை வந்து விட்டது என்று நினைக்கிறேன்.

**வீரன் (மாணவன் 3) :** அரசியாருக்கு வணக்கம். மைசூரில் இருந்து ஐயாயிரம் குதிரைப் படை வீரர்கள் வந்துள்ளனர்.

**வேலுநாச்சியார் (மாணவி 1) :** அப்படியா ? மகிழ்ச்சி. அவர்களை ஓய்வு எடுக்கச் சொல் . நான் பிறகு வந்து பார்க்கிறேன். வீரன் வெளியேறினான்

**அமைச்சர் தாண்டவராயர் (மாணவன்2):** ஐதர்அலி உறுதியாகப் படையை அனுப்புவார் என்று எனக்கு முன்பே தெரியும் அரசியாரே

**வேலுநாச்சியார் (மாணவி 1) :** எதனால் அப்படிச் சொல்கிறீர்கள் ?

**அமைச்சர் தாண்டவராயர்(மாணவன்2) :** நாம் இருவரும் ஐதர் அலியைச் சந்திக்க மைசூர் சென்றோம் அல்லவா ? அப்போது தாங்கள் அவரிடம் உருதுமொழியில் பேசினீர்கள். அப்போது அவர் முகத்தில் பெரிய மகிழ்ச்சி தோன்றியதை நான் கண்டேன்

**சின்னமருது(மாணவன் 4) :** நம் அரசியாரின் பன்மொழி அறிவு நமக்குப் பெரிய நன்மையைத் தந்திருக்கிறது

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**VI. கீழ்க்காணும் தொடர்களில் உள்ள பிழைகளைத் திருத்தி எழுதுக.**

**1. ஒரு அழகிய சிற்றூரில் ஓர் குளம் இருந்தது.**
**விடை:** ஓர் அழகிய சிற்றூரில் ஒரு குளம் இருந்தது.
**2. ஒரு இரவும் ஓர் பகலும் சேர்ந்தது ஒரு நாள்.**
**விடை:** ஓர் இரவும் ஒரு பகலும் சேர்ந்தது ஒரு நாள்
**3. அது இல்லாத இடத்தில் எதுவும் நடக்காது.**
**விடை:** அஃது இல்லாத இடத்தில் எதுவும் நடக்காது
**4. அஃது நகரத்திற்குச் செல்லும் சாலை.**
**விடை:** அது நகரத்திற்குச் செல்லும் சாலை
**5. அது ஒரு இனிய பாடல்.**
**விடை:** அஃது ஓர் இனிய பாடல்

**VII. அகரவரிசைப் படுத்துக.**

**பெண்கள், பாரதம், புதுமை, பீலி, பேருந்து, பூமி, பழங்கள், பொதுக்கூட்டம், பையன், போக்குவரத்து, பின்னிரவு.**

**விடை:** பழங்கள், பாரதம், பின்னிரவு, பீலி, புதுமை, பூமி, பெண்கள், பேருந்து, பையன், பொதுக்கூட்டம், போக்குவரத்து

**VIII. செயல்திட்டம் .**

**காந்தியடிகளின் விடுதலைப் போராட்ட நிகழ்வுகள் பற்றிய படங்களைத் திரட்டிப் படத்தொகுப்பு ஒன்றை உருவாக்குக.**











Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



இயல் இரண்டு

## 2. எல்லாரும் இன்புற

கவிதைப்பேழை

இயல் இரண்டு

## 2.அ. பராபரக்கண்ணி

–செய்யுள்

### மதிப்பீடு

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

**1. தம் + உயிர் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல்**

அ) தம்முயிர் ஆ) தமதுயிர்

இ) தம்உயிர் ஈ) தம்முஉயிர் **விடை :அ) தம்முயிர்**

**2. இன்புற்று + இருக்க என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல்**

அ) இன்புற்றிருக்க ஆ) இன்புறுறிருக்க

இ) இன்புற்றுஇருக்க ஈ)இன்புறுஇருக்க

**விடை:அ) இன்புற்றிருக்க**

**3. தானென்று என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது .........**

அ) தானெ + என்று ஆ) தான் + என்று

இ) தா+ னென்று ஈ) தான் + னென்று **விடை : ஆ) தான் + என்று**

**4. சோம்பல் என்னும் சொல்லுக்குரிய பொருத்தமான எதிர்ச் சொல் .........**

அ) அழிவு ஆ) துன்பம்

இ) சுறுசுறுப்பு ஈ) சோகம் **விடை : இ) சுறுசுறுப்பு**

---

**II. நயம் அறிக**

**பராபரக்கண்ணி பாடலில் இடம்பெற்றுள்ள எதுகை, மோனைச் சொற்களை எடுத்து எழுதுக.**

**விடை :** பாடலின் அடிகளிலோ, சீர்களிலோ இரண்டாம் எழுத்து ஒன்றுபோல வரத்தொடுப்பது எதுகை ஆகும்.

**அடிஎதுகை :**

1. தம் உயிர்போல் 2. அன்பர் 3. எல்லாரும்
   செம்மையருக்கு இன்ப அல்லாமல்

பாடலின் அடிகளிலோ, சீர்களிலோ முதல் எழுத்து ஒன்றுபோல வரத்தொடுப்பது மோனை ஆகும்.

**சீர்மோனை :**

1. தம் உயிர் – தானென்று –தண்டருள்
2. அன்பர் – ஆளாக்கி
3. இன்புற்று – இருக்க

---

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



5. வைகாசித் திங்கள் முழுநிலவு நாளில் கோமுகி என்ற பொய்கையின் மேல்.......... தோன்றும். **விடை : அமுதசுரபி**

**III. குறுவினா.**

**1. மணிமேகலை அமுதசுரபி என்ற பாத்திரத்தை எங்கு பெறுகிறாள் ?**

**விடை :** மணிமேகலை அமுதசுரபி என்ற பாத்திரத்தை மணிபல்லவத் தீவில் பெறுகிறாள்.

**2. மணிமேகலை சிறு குறிப்பு தருக.**

**விடை :** பூம்புகாரில் வாழ்ந்த கோவலன் மாதவி ஆகியோரின் மகள் மணிமேகலை ஆவாள். மணிமேகலை ஒரு புத்த துறவியாகவே வாழ்ந்தாள்.

**கற்பவை கற்றபின்**

**பசிப்பிணி போக்கிய பாவை நாடகத்தை வகுப்பில் நடித்துக் காட்டுக.**

**காட்சி 1**

**இடம் : மணிபல்லவத்தீவு**

**கதை மாந்தர்கள் :** மணிமேகலை(மாணவி 1), தீவதிலகை (மாணவி 2)

**மணிமேகலை (மாணவி 1) :** (தனக்குள்)

எங்குப் பார்த்தாலும் வெண்மணல் குன்றுகள். பூத்துக்குலுங்கும் செடிகொடிகள். அடர்ந்த மரங்கள். இடையே பொய்கைகள். மனதை மயக்கும் காட்சிகள். ஆகா அருமை. அருமை அருமை.

(அப்போது அவள் எதிரில் தீவதிலகை வருகிறாள்)

**தீவதிலகை (மாணவி 2) :** அழகிய பெண்ணே! நீ யார் ? இங்கு எப்படி வந்தாய் ?

**மணிமேகலை (மாணவி 1) :** நான் பூம்புகார் நகரைச் சேர்ந்தவள். என் பெயர் மணிமேகலை. மணிமேகலா தெய்வம் என்னை இங்கு கொண்டு வந்து சேர்த்தது. நீங்கள் யார் அம்மா ? நீங்கள் எப்படி இத் தீவிற்கு வந்தீர்கள் ?

**தீவதிலகை (மாணவி 2) :** என் பெயர் தீவதிலகை. நான் இத் தீவையும் இதிலுள்ள புத்த பீடிகையையும் காவல் செய்து வருகிறேன். பெருமை மிக்கவர்கள் மட்டுமே இத் தீவிற்கு வந்து இந்தப் புத்த பீடிகையை வணங்க முடியும். நீ அந்தப் பெருமையைப் பெற்றிருக்கிறாய். இன்னும் நீ அறிய வேண்டியது ஒன்று உண்டு.

**மணிமேகலை (மாணவி 1) :** அது என்ன அம்மா ?

**தீவதிலகை (மாணவி 2) :** நம் எதிரில் பூக்கள் நிறைந்து விளங்கும் இந்தப் பொய்கையைப் பார். இதற்குக் கோமுகி என்று பெயர் "கோ" என்றால் பசு. முகி என்றால் முகம். பசுவின் முகம் போன்று அமைந்து இருப்பதால் இப்பொய்கை கோமுகி என்னும் பெயரைப் பெற்றது.

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**IX. கலைச் சொல் அறிவோம்**

1. அறக்கட்டளை – Trust
2. தன்னார்வலர் – Volunteer
3. இளம் செஞ்சிலுவைச் சங்கம் – Junior Red Cross
4. சாரண சாரணியர் – Scouts & Guides
5. சமூக பணியாளர் – Social Worker

**X. இணையத்தில் காண்க**

**பொதுத் தொண்டு செய்யும் நிறுவனங்களின் பெயர்களை இணையத்தில் கண்டு திரட்டுக.**

★ விடியல் 1986 ல் நிறுவப்பட்ட ஒரு சமூக மாற்று நிறுவனம்.

★ அட்சய பாத்திரம் அறக்கட்டளை மதிய உணவுவை சமைத்து அரசு நடத்தும் பள்ளிகளுக்கு நேரில் சென்று வழங்குகிறது.

## வாழ்வியல்

**இயல் இரண்டு**

## 2.ஏ. திருக்குறள் – செய்யுள்

**மதிப்பீடு**

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

**1. ஏழைகளுக்கு உதவி செய்வதே ..................... ஆகும்**

அ) பகை ஆ) ஈகை

இ) வறுமை ஈ) கொடுமை

**விடை : ஆ) ஈகை**

**2. பிற உயிர்களின்..................... க் கண்டு வருந்துவதே அறிவின் பயனாகும்.**

அ) மகிழ்வை ஆ) செல்வத்தை

இ) துன்பத்தை ஈ) பகையை

**விடை : இ) துன்பத்தை**

**3. உள்ளத்தில் ............. இல்லாமல் இருப்பதே சிறந்த அறமாகும்**

அ) மகிழ்ச்சி ஆ) மன்னிப்பு

இ) துணிவு ஈ) குற்றம் **விடை : ஈ) குற்றம்**

**II. இடம் மாறியுள்ள சீர்களை முறைப்படுத்தி எழுதுக.**

1. ***வறியார்க் குஒன்று ஈகைமற்று ஈவதே எல்லாம்***
***குறியெதிர்ப்பை உடைத்து நீரது.***

**விடை:** *வறியார்க் குஒன்று ஈவதே ஈகைமற்று எல்லாம்*
*குறியெதிர்ப்பை நீரது உடைத்து .*

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



இயல் மூன்று

## 3.இன்னுயிர் காப்போம்

### கவிதைப்பேழை

இயல் மூன்று

## 3.அ. ஆசியஜோதி –செய்யுள்

### மதிப்பீடு

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

**1. புத்தரின் வரலாற்றைக் கூறும் நூல்**

அ) ஜீவ ஜோதி ஆ) ஆசிய ஜோதி
இ) நவ ஜோதி ஈ) ஜீவன் ஜோதி **விடை : ஆ) ஆசிய ஜோதி**

**2. நேர்மையான வாழ்வை வாழ்பவர்**

அ) எல்லா உயிர்களிடத்தும் இரக்கம் கொண்டவர்
ஆ) உயிர்களைத் துன்புறுத்துபவர்
இ) தம்மை மட்டும் காத்துக்கொள்பவர்
ஈ) தம் குடும்பத்தையே எண்ணி வாழ்பவர்

**விடை : அ) எல்லா உயிர்களிடத்தும் இரக்கம் கொண்டவர்**

**3. ஒருவர் செய்யக்கூடாதது**

அ) நல்வினை ஆ) தீவினை
இ) பிறவினை ஈ) தன்வினை **விடை : ஆ) தீவினை**

**4. எளிதாகும் என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது.**

அ) எளிது + தாகும் ஆ) எளி + தாகும்
இ) எளிது + ஆகும் ஈ) எளிதா + ஆகும்

**விடை : இ) எளிது + ஆகும்**

**5. பாலையெல்லாம் என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது.**

அ) பாலை + யெல்லாம் ஆ) பாலை + எல்லாம்
இ) பாலை + எலாம் ஈ) பா + எல்லாம்

**விடை : ஆ) பாலை + எல்லாம்**

**6. இனிமை + உயிர் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல்**

அ) இன்உயிர் ஆ) இனிய உயிர்
இ) இன்னுயிர் ஈ) இனிமைஉயிர் **விடை : இ) இன்னுயிர்**

**7. மலை+எலாம் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல்**

அ) மலைஎலாம் ஆ) மலையெலாம்
இ) மலையெல்லாம் ஈ) மலைஎல்லாம்

**விடை : ஆ) மலையெலாம்**

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**கடிதம் எழுதுக.**

**நூல்கள் அனுப்பவேண்டி பதிப்பகத்தாருக்குக் கடிதம் எழுதுக.**

அனுப்புநர்:

ம. மீனாட்சி
54, பிள்ளைமார் தெரு,
ஆரப்பாளையம்,
மதுரை / 16

பெறுநர்:

உரிமையாளர் அவர்கள்,
மணிவாசகர் பதிப்பகம்,
10, சிவப்பிரகாசம் தெரு,
சென்னை – 600017

ஐயா,

என் வீட்டில் நான் ஒரு ஒரு சிறு நூலகத்தை உருவாக்கியுள்ளேன். அதில் எனக்குச் சில நூல்கள் தேவைப்படுகின்றன. எனவே நான் கீழே குறிப்பிடும் நூல்களை அஞ்சல்வழி விற்பனை மூலம் விரைவில் அனுப்பி வையுங்கள். புத்தகங்களுக்குரிய பணத்தை நான் தபால்காரரிடம் கொடுத்து அவரிடம் நூல்களைப் பெற்றுக்கொள்கிறேன்.

1. புத்தகப் பூங்கொத்து
2. இலக்கியச் சாறு
3. அறிவியல் புனைகதைகள்

நன்றி

தங்கள் உண்மையுள்ள,
ம. மீனாட்சி

மதுரை.
நாள்: ...............

www.Padasalai.Net

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



இயல் மூன்று

## 3. ஊ. மொழியோடு விளையாடு – மொழிப்பயிற்சி

**I. கட்டங்களில் உள்ள சொற்களைக் கொண்டு தொடர்கள் உருவாக்குக.**

| | | |
|---|---|---|
| நேற்று<br>இன்று<br>நாளை | எங்கள் ஊரில் மழை | பெய்கிறது<br>பெய்யும்<br>பெய்தது |

**இவை போன்று மூன்று காலங்களையும் காட்டும் சொற்றொடர்களை அமைக்க.**

நேற்று எங்கள் ஊரில் மழை பெய்தது
இன்று எங்கள் ஊரில் மழை பெய்கிறது
நாளை எங்கள் ஊரில் மழை பெய்யும்

| | | |
|---|---|---|
| நேற்று<br>இன்று<br>நாளை | நண்பனுடன் | விளையாடினேன்<br>விளையாடுகிறேன்<br>விளையாடுவேன் |

நேற்று நண்பனுடன் விளையாடினேன்
இன்று நண்பனுடன் விளையாடுகிறேன்
நாளை நண்பனடன் விளையாடுவேன்

**II. கட்டங்களில் மறைந்துள்ள அணிகலன்களின் பெயர்களை எழுதுக.**

| | | | | |
|---|---|---|---|---|
| க | ணி | மோ | பு | வ |
| ம் | ம | தி | ம் | ளை |
| ம | ளா | ர | ல | ய |
| ல் | சூ | ம் | சி | ல் |
| க | டு | க் | க | ன் |

**எ.கா : கம்மல், மோதிரம், வளையல், கடுக்கன், சிலம்பு, சூளாமணி**

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

# செலக்சன்

எங்கள் வெளியீடுகள்

3 முதல் 10 வகுப்பு வரை

தமிழ்

ஆங்கிலம்

கணக்கு

அறிவியல்

சமூக அறிவியல்

3 முதல் 6 வகுப்பு வரை 5 in 1

தமிழ் வழி & ஆங்கில வழி

**அன்பு நிலையம்**

129, வடக்கு ஆவணி மூல வீதி

மதுரை - 625001

94430 43338

94430 46662

www.Padasalai.Net